**தலைப்பு 320 – சிவில் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு – 320 சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், ஏடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 30 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 17,477.92 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 17,301.40 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான ரூபா 176.52 மில்லியன் அதாவது 1.01 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டெழுபலைவ | 17,289.92 | 17,114.02 | 175.90 | 1.02 |
| மூலதனம் | 188.00 | 187.38 | 0.62 | 0.33 |
| மொத்தம் | 17,477.92 | 17,301.40 | 176.52 | 1.01 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு கருமங்களுக்காக திணைக்களத்திற்கு வனசீவராசிகள் திணைக்களத்தினால் ரூபா 2.9 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 1.6 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க, ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்தான ரூபா 1.3 மில்லியன் அதாவது 44.83 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 32001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 340.00 | 327.55 | 310.00 | 321.05 | 48.00 | 14.89 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் கீழ் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 7002/0000/00/0396/00/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 1.67 மில்லியனாக இருந்தது.

**2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்த பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை**

திணைக்களத்தினால் நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.2.1 ஏனைய திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு**

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாடு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அன்னாசிகல ஐஸ்பில்ல 35 கி.மீ மின்சார வேலி நிர்மாணத்திற்காக 2013 மார்ச் 04 ஆந் திகதி வனசீவராசிகள் திணைக்களத்தினால் ரூபா 4,709,268 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் 13 கி.மீ வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது மின்சார வேலி நிர்மாணத்திற்காக ஐந்து வலய பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,065,400 ஆன முற்பணம் உரிய செயற்பாடு நிறைவேற்றப்படாமல் பணமாக மீள தீர்க்கப்பட்டிருந்தது.

(இ) 2013 ஆம் ஆண்டின் போது மின்சார வேலி நிர்மாணத்திற்காக வழங்கப்பட்டிருந்த முற்பணங்களிலிருந்து ரூபா 3,058,360 தொகை 2015 மார்ச் மாதமளவிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரித்து நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2016 மே 27 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்

சனாதிபதி செயலகத்தினால் முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் 16 வாகனங்கள் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு 2006 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன், அவ்வாகனங்கள் இதுவரை கையேற்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 27,594,941 தொகையான பொறுப்புக்களுக்கு கடப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(இ) | 1,960,582 | 08 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த செயல்நிமித்த உபகட்டுநிதி செயற்பாடுகள் நிறைவுபெற்ற உடனேயே தீர்க்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 381(1) | - | 47 வங்கி நடைமுறைக் கணக்குகளும் 23 சேமிப்புக் கணக்குகளும் அரச கணக்குகள் திணைக்களத்தின் அங்கீகாரமில்லாமல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 395(ஆ) மற்றும் (இ) | - | திணைக்களத்தின் செயற்திட்டங்களுக்குரிய 19 வங்கி நடைமுறைக் கணக்குகளுக்காக வங்கி இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) அரச நிதிச் சுற்றுநிருபம்

----------------------------------

| | | |
|---|---|---|
| 2015 யூலை 14 ஆந் திகதிய PFD/RED/011/ 04/2015/ ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் "ஆ" பந்தி | 33,312,935 | 33 சந்தர்ப்பங்களின் போது ரூபா 100,000 எல்லையை விஞ்சி செயல்நிமித்த உபகட்டுநிதி அரச நிதித் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி வழங்கப்பட்டிருந்தது. |

### 3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) 2014 யூன் 22 ஆந் திகதி 200 திணைக்கள கொடிகள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கையில் 2014 நவம்பர் 22 ஆந் திகதி மிஹிந்தலையில் நடாத்தப்பட்ட விழாவிற்காக மேலும் 200 கொடிகள் ரூபா 990,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் அக்கொடிகள் குறித்த விழா நடாத்தப்பட்டதன் பின்னர் 2014 திசெம்பர் 22 ஆந் திகதி வழங்குனரால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) செயற்திட்டங்களுக்கு இணைக்கப்பட்டிருந்த வீரர்களின் எண்ணிக்கை ஆகக்கூடியது 24,000 ஆக இருந்த போதிலும், திணைக்களத்தின் வெவ்வேறு செயற்திட்ட வருமானங்களிலிருந்து ரூபா 66,600,000 தொகை செலவு செய்து 36,000 பிரயாணப் பைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 12,000 பிரயாணப் பைகள் கூடுதலாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அக்கொள்வனவிற்காக அமைச்சின் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மொத்தக் கட்டளையும் நான்கு பகுதிகளாக பிரிக்கப்பட்டு திணைக்கள கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தின் பேரில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேற்குறிப்பிட்டதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து பிரயாண பைகளும் 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவில் களஞ்சியத்திற்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 2,035,000 கூட்டுப்பெறுமதியான 1,100 பிரயாண பைகள் 2015 திசெம்பர் மாதமளவிலும் வழங்குனரால் களஞ்சியத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 08 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,590,510 செயல்நிமித்த உபகட்டுநிதி உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்படாமல் நீண்டகாலமாக வைத்திருக்கப்பட்டதன் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது.

### 3.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

**அரசாங்க கொள்வனவு வழிகாட்டி நடைமுறையிலிருந்து விலகுதல்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (ஆ) வழிகாட்டலின் பிரகாரம் ரூபா 500,000 இனை மிகைத்து பொருட்கள் அல்லது சேவைகள் கொள்வனவின் போது வழங்குனருடன் எழுத்துமூல உடன்படிக்கையொன்று கைச்சாத்திட வேண்டிய போதிலும், பின்வரும் கொள்வனவு செயற்பாடுகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(i) உத்தியோகபூர்வ விழாவிற்கான 50 சீருடைகள் மற்றும் 300 அலுவலக சீருடைகள் ரூபா 1,653,624 செலவிடப்பட்டு தைத்து வழங்குதல்.

(ii) தலைமையக கட்டிடத்தின் நுழைவாயிலிருந்து படிக்கற்கள் வரை உட்கூரை மற்றும் இரண்டு பக்க சுவர் படிக்கடடுகளில் ரூபா 1,273,480 செலவிடப்பட்டு மேவுகையிடல் மற்றும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டியின் 4.3 வழிகாட்டி கோவையின் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிராமை.

(iii) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.6 (அ) வழிகாட்டியின் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்கு செலுத்த வேண்டிய ஒவ்வொரு கொடுப்பனவின் போதும் குறிப்பிட்ட தொகையொன்று நிறுத்தி வைக்கப்பட வேண்டிய போதிலும், மேற்படி ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 774,200 தொகையிலிருந்து ஒரு தொகையை நிறுத்திவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) திணைக்களத்தின் தலைமை அலுவலகம் நடாத்திச் செல்லப்படும் கட்டிடத்தை குத்தகைக்கு எடுப்பது தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

* அரசின் கொள்வனவு நடைமுறைகளின் பிரகாரம் கேள்வி கோரப்பட்டிருக்கவில்லை.

* நிதிப் பிரமாணம் 835(அ) இன் பிரகாரம் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்காக பொருத்தமான கட்டிடம் எதுவும் இல்லையென உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

* நிதிப் பிரமாணம் 835(உ) இன் பிரகாரம், குத்தகை உடன்படிக்கை காலம் 03 ஆண்டுகளுக்கு மேற்படக்கூடாத போதிலும், மேற்குறித்த கட்டிடத்திற்காக 05 ஆண்டு காலத்திற்கு குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

* மேற்குறித்த கட்டிடத்தின் குத்தகை காலஎல்லை 2012 செப்தெம்பர் 30 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், புதிய குத்தகை உடன்படிக்கையொன்று இல்லாமல் தொடர்ந்தும் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் நடாத்திச் செல்லப்படுவதுடன் 2015 செப்தெம்பர் வரை ரூபா 89,447,501 வாடகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன், வீத வரிக் கட்டணங்களாக ரூபா 2,514,358 செலுத்தப்பட்டிருந்தது.

* மேற்குறித்த கட்டிடத்தின் திருத்த நடவடிக்கைகளுக்காக 2015 சனவரி 23 ஆந் திகதி ரூபா 1,461,358 செலுத்தப்பட்டிருந்தது.

**3.8 நட்டங்களும் சேதங்களும்**

2014 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெறும் வாகன விபத்தினால் ஏற்பட்ட இழப்புக்களின் பெறுமதி ரூபா 179,820 ஆக இருந்தும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த இழப்புக்களை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) முன்பள்ளி ஆசிரியைகளுக்கான சேலைகள் கொள்வனவின் போது ரூபா 14,500,000 பெறுமதியான 10,000 சேலைகள் தேவையான அளவினை விட கூடுதலாக கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதி அளவிலும் 3,783 சேலைகள்களஞ்சியத்தில் காணப்பட்டன.

(ஆ) வருடாந்த கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் சப்பாத்து பொலிஷ் தேவைப்பாடு 70,000 பொலிஷ் டின்களாக இருந்த போதிலும், 80,000 பொலிஷ் டின்கள் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(இ) மேற்குறித்த பிரகாரம் 80,000 பொலிஷ் டின்கள் ஒன்று 98.80 வீதம் (பெறுமதி சேர் வரியில்லாமல்) கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், உற்பத்தியாளரிடம் விசாரித்திருந்தால் ஒன்று ரூபா 72 இற்கு (பெறுமதி சேர் வரியுடன்) கொள்வனவு செய்வதற்கு முடியுமாக இருந்திருக்கும். அதன் பிரகாரம் உரிய கொள்வனவிற்காக ரூபா 3,013,440 கூடுதலாக செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 14 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 15 | 10 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 21 | 16 | 05 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 40,060 | 38,758 | 1,302 | - |
| (v) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 33 | - | 33 |
| | மொத்தம் | 40,111 | 38,831 | 1,313 | 33 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 1,313 வெற்றிடங்கள் காணப்பட்டமையால் 2015 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்த போதிலும், அச்சேமிப்புக்கள்

தொடர்பில் பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டமை தாக்கமளித்திருக்கவில்லை. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) ஆட்சேர்க்கப்பட்டிருந்த மிகை ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பாக முறையான அங்கீகாரமொன்று பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.